**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை – **செல்வி V. பார்கவி, B.A.B.L., L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி , சீர்காழி
********

2021–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31–ம்நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2052, பிலவ வருடம் ஆவணி மாதம் 15–ம்நாள்
**********

**அசல் வழக்கு எண். 158/2016–ல் இடைமனு எண். 737/16 ல்**
**இடைமனு எண். 859/2017**

கோபாலகிருஷ்ணன் ...மனுதாரர்/மனுதாரர்/ வாதி....

....எதிர்....

கணேசன் ..எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/ பிரதிவாதி...

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 18.08.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. வெங்கடேசன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு எ. செல்வராஜ் அவர்களும் ஆஜராகியும் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

அசல் வழக்கில் இடைமனு எண். 737/2016–ல் 06.09.2016–ம் தேதியன்று இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மீறி எதிர்மனுதாரர் மனுதாரரின் வசத்தில் உள்ள இடத்தில் கட்டிடம் கட்டியதால் எதிர்மனுதாரரை கைது செய்து சிவில் சிறைக்கு அனுப்ப உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு..ச.கட்டளை 39, விதி 2(A)–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி. அசல் வழக்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குசொத்தானது சீர்காழி தாலுக்கா, பூம்புகார் கிராமத்தில் புல எண். 23A – ல் உள்ள 3–1/3 செண்டு ( பத்து குழி ) புஞ்சை மனையாகும். தாவாச்சொத்தில் மனுதாரரின் அனுபவத்திற்கு எதிர்மனுதாரரோ அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் அசல் வழக்கு முடியும் வரை செய்யக்கூடாது என்று இடைமனு எண். 737/2016–ல் 6.9.2016–ல் இடைக்கால தடை உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு அந்த உத்தரவு அமலில் உள்ளது. இந்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு அமலில் உள்ள நிலையில் அதை மீறி எதிர்மனுதாரர்

தாவாச்சொத்தில் கட்டிடம் கட்டியுள்ளாா். இதுகுறித்து மனுதாரா் 23.2.2017–ம் தேதியன்று பூம்புகாா் காவல்நிலையத்தில் புகாா் கொடுத்துள்ளாா். அந்த புகாாினை விசாாித்து காவல்துறையினா் எதிா்மனுதாரா் வழக்கு முடியும் வரையில் கட்டுமானப்பணிகள் எதுவும் செய்யக்கூடாது என்று எச்சாித்து அனுப்பிவைத்தனா். காவல்துறையினாின் உத்தரவை மீறும் வகையிலும் இந்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவை மீறும் வகையிலும் எதிா்மனுதாரா் தாவாச்சொத்தான மனுதாராின் இடத்தில் ஸ்ரீகிருஷ்ணா வணிக வளாகம் கட்டி 29.5.2017–ம் தேதியன்று திறப்பு விழா நடத்தி உள்ளாா். எனவே எதிா்மனுதாரா் இந்நீதிமன்றம் அசல் வழக்கில் பிறப்பித்த இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவை மீறி செயல்பட்டுள்ளதால் எதிா்மனுதாரரை கைது செய்து சிவில் சிறைக்கு அனுப்ப உத்தரவிடக்கோாியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>எதிா்மனுதாரா் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும். மனுதாரா் அசல் வழக்கிலும், இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவிலும் எதிா்மனுதாராின் வசத்தில் உள்ள தாவாச்சொத்தை மனுதாராின் வசத்தில் இருப்பதாக பொய்யாக கூறி, பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் அசல் வழக்கு முடியும் வரையில் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பெற்றுள்ளாா். தாவாச்சொத்து மனுதாராின் வசத்தில் இருப்பதாகவும், அதில் எதிா்மனுதாரா் அத்துமீறி புகுந்து கட்டிடம் கட்டியுள்ளதாகவும் அதனைக்குறித்து மனுதாரா் காவல்துறையில் புகாா் கொடுத்து காவல்துறையினா் எதிா்மனுதாரரை எச்சாித்து அனுப்பியதாகவும் கூறியுள்ளது உண்மையல்ல. தாவா சொத்து எந்த காலத்திலும் மனுதாராின் வசத்திலும், அனுபவத்திலும் இருந்தது இல்லை. தாவாச்சொத்து எதிா்மனுதாராின் வசத்திலேயே இந்த அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பிருந்து இருந்து வருகிறது. எதிா்மனுதாரா் தாவாச்சொத்தில் கட்டியுள்ள கட்டிடம் சாிவர பூா்த்தி செய்யப்படாமல் உள்ளது. அதனை மறைத்து மனுதாரா் அசல் வழக்கையும், இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவையும் தாக்கல் செய்துள்ளாா். எதிா்மனுதாரா் எந்தக்காலத்திலும் நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் இருக்கவில்லை. எதிா்மனுதாரா் தாவாச்சொத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே ஸ்ரீகிருஷ்ணா வணிக வளாகம் என்ற பெயாில் கட்டிடம் கட்டியுள்ளாா். எதிா்மனுதாரா் இந்நீதிமன்றம் பிறப்பித்த உறுத்துக்கட்டளை உத்தரவிற்கு விரோதமாக எந்தவித செயலும் செய்யவில்லை. மனுதாராின் வசத்தில் உள்ள சொத்து எதிா்மனுதாராின் வசத்தில் உள்ள தாவாச்சொத்திற்கு மேற்கில் உள்ளது. மனுதாரா் அவரது சொத்தின் நான்கெல்லையை தவறாகக்காட்டி எதிா்மனுதாராின் சொத்தை அபகாிக்க முயல்கிறாா். எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>**இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**</u>

மனுதாரர்/ வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 முதல் ம.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. <u>**தீர்வு**</u>

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கை எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவாச்சொத்தைப்பொறுத்த நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், அசல் வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இடைமனு எண். 737/2016 தாக்கல் செய்து அதில் இந்நீதிமன்றத்தால் 6.9.2016-ம் தேதியன்று அசல் வழக்கு முடியும்வரையில் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த உத்தரவை மீறி எதிர்மனுதாரர் தாவாச்சொத்தில் கட்டிடம் கட்டி 29.5.2017 அன்று திறப்பு விழா நடத்தியுள்ளார் என்றும், எதிர்மனுதாரரின் செய்கையானது நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் செய்கை என்பதால் எதிர்மனுதாரரை கைது செய்து சிவில் சிறைக்கு அனுப்ப உத்தரவிட வேண்டுமெனக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தாவாச்சொத்து எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், மனுதாரரின் சொத்தானது எதிர்மனுதாரருக்கு சொந்தமான தாவாச்சொத்ததுக்கு மேற்கில் உள்ளது என்றும், அதனை மறைத்து மனுதாரர் பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் அசல் வழக்கை தாக்கல் செய்து இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பெற்றுள்ளார் என்றும், எதிர்மனுதாரர் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு எதையும் மீறவில்லை என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கானது மனுதாரரின் வசத்திலும், அனுபவத்திலும் உள்ள தாவா சொத்தில் எதிர்மனுதாரரோ அவரது ஆட்களோ அத்துமீறி

ஆக்கிரமித்து மனுதாரரின் வசத்திற்கும், அனுபவத்திற்கும் எவ்வித இடையூறும் விளைவிக்கக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் அசல் வழக்குடன் தாக்கல் செய்துள்ள இடைமனு எண். 737/2016–ல் 06.09.2016 அன்று ஒருதலைபட்சமாக இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கப்பட்டு மேற்படி இடைமனு எண். 737/2016–ல் விசாரணைக்கு பிறகு அந்த மனுவானது 13.03.2018 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

9. மனுதாரர் தன் மனுவில் எதிர்மனுதாரர் இடைமனு எண். 737/2016–ல் 06.09.2016 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மீறி தாவா சொத்தில் கட்டிடம் கட்டியுள்ளதாக கூறியுள்ளார். மனுதாரர் தன் வழக்கிற்கு ஆதரவாக ம.சா.ஆ.1 ஆக 23.02.2017 மனுதாரர் பூம்புகார் காவல்நிலைய காவல்துறை ஆய்வாளருக்கு அனுப்பிய புகார் மனுவின் நகலும், ம.சா.ஆ.2 ஆக 23.02.2017 மேற்படி மனுவினை பெற்றுக்கொண்டதற்கு காவல்துறையினர் கொடுத்த மனு ரசீதின் அசலும், ம.சா.ஆ.3 ஆக எதிர்மனுதாரர் பெயரிடப்பட்டுள்ள புதுமனை புகுவிழா அழைப்பிதழின் அசலும், ம.சா.ஆ.4 ஆக குறுந்தகடுடன் கூடிய புகைப்படங்கள் நான்கும் ஆகிய ஆவணங்களை இந்த மனுவில் குறியீடு செய்துள்ளார். அதற்கு மாறாக எதிர்மனுதாரர் தான் தாவா சொத்தின் வசத்திலும், அனுபவத்திலும் இருப்பதாகவும் அதற்கு ஆதரவாக எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களை தனது தரப்பில் குறியீடு செய்துள்ளார்.

10. மனுதாரர் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் நீதிமன்ற உத்தரவை மீறி கட்டிடம் கட்டியுள்ளார் என்பதை காண்பிக்க ம.சா.ஆ.4 புகைப்படம் மற்றும் சி.டி.ஐ தாக்கல் செய்துள்ளார். ஆனால் ம.சா.ஆ.4 புகைப்படம் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்பதற்கான ரசீதோ, குறிப்போ ம.சா.ஆ.4–ல் இல்லை. எனவே மனுதாரர் எந்த தேதியில் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் கட்டிடம் கட்டினார் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிர்மனுதாரர் தன் எதிருரையில் தாவா வழக்கு சொத்து எந்த காலத்திலும் மனுதாரர் வசம் இல்லை என்றும் எதிர்மனுதாரர் வசத்திலேயே இருந்து வந்துள்ளது என்றும் வழக்கிற்கு முன்பே மேற்படி சொத்தில் எதிர்மனுதாரர் கட்டிடம் கட்டியுள்ளார் என்றும் அது சரிவர பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது என்றும் கூறியுள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4 புகைப்படத்தில் பூர்த்தி செய்யப்படாத கட்டிடம் என்பது தெரிகிறது. மேலும் அந்த கட்டிடம் தாவா வழக்கிற்கு முன்பு கட்டப்பட்டதா அல்லது இடைமனு எண். 737/2016–ல் வழங்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவிற்கு பிறகு கட்டப்பட்டதா என்பதை தெளிவாக நிரூபிக்கும் சுமை மனுதாரருக்கே உள்ளது. ஆனால் மனுதாரர் ம.சா.ஆ.4 புகைப்படங்களின் மூலம் அவற்றை தெளிவாக நிரூபிக்கவில்லை. ம.சா.ஆ.3 ஆவணத்தில்

29.05.2017–ல் புதுமனை புகுவிழா நடந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்திருந்தாலும் அந்த அழைப்பிதழ் அசல் வழக்கிற்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடத்திற்கான அழைப்பிதழா அல்லது இடைமனு எண். 736/2017–ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவிற்கு பின்பு கட்டப்பட்ட கட்டிடத்திற்கான அழைப்பிதழா என்பதை அழைப்பிதழின் தேதியை மட்டும் வைத்து தீர்மானிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. மேலும் வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் " இந்த அசல் வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு முன்னர் எதிர்மனுதாரர் கட்டிடம் கட்டி முடித்துவிட்டார் என்றால் சரிதான் " என்றும் ம.சா.ஆ.4 புகைப்படங்கள் எப்பொழுது எடுக்கப்பட்டது என்றால் அசல் வழக்கை தாக்கல் செய்தபொழுது எடுக்கப்பட்டது என்றும் தனது மனுவின் ஏற்புரைக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி ம.சா.1 சாட்சியத்தின் மூலமும் ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலமும் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் இடைமனு எண். 737/2016–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தேதிக்கு பின்புதான் கட்டிடம் கட்டினார் என்பதை மனுதாரர் நிரூபிக்கவில்லை என்பது தெளிவாகிறது. ம.சா.2 மற்றும் ம.சா.3 சாட்சியங்களும் மனுதாரரின் வழக்கை நிரூபிக்கக்கூடிய போதுமான சாட்சியங்களாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்து எதிர்மனுதாரர் வசத்திலும், அனுபத்திலும் இருப்பதாக கூறியுள்ளதை பொறுத்து தாவா சொத்து மனுதாரரின் வசத்திலும், அனுபவத்திலும் உள்ளதா அல்லது எதிர்மனுதாரரின் வசத்திலும், அனுபவத்திலும் உள்ளதா என்பது குறித்து அசல் வழக்கில் சாட்சிய விசாரணைக்கு பின்னரே தீர்வு காண முடியும். எதிர்மனுதாரர் தனது தரப்பிற்கு ஆதரவாக **2012(1)MWN(Civil) 257** என்ற மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் முன் தீர்ப்பை குறிப்பாணையுடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பில்...

> **" It is clear that the Relief that could be granted in the main proceedings could not be granted in the contempt proceedings as a short cut method..."**

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

13. மேற்படி மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை கட்டளை 39, விதி–2A என்ற இடைமனுவில் வழங்க முடியாது என்பது தெளிவாகிறது. இந்த மனுவில் மனுதாரர் தன் வழக்கான எதிர்மனுதாரர் தாவா சொத்தில் இடை மனு எண். 737/16–ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவிற்கு பிறகு கட்டிடம் கட்டினார் என்பதை நிரூபிக்கவில்லை என்பதால் இந்த இடைமனுவில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரமான எதிர்மனுதாரரை சிவில் சிறைக்கு அனுப்புவது சரியானதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அசல் வழக்கில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரத்திற்கு அசல்

வழக்கில் இருதரப்பு சாட்சிய விசாரணைக்கு பின்னரே முடிவு காணமுடியும் என்றும் அது குறித்து இந்த இடைமனுவில் எவ்வித முடிவும் காணமுடியாது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் அசல் வழக்கில் இடைமனு எண். 737/2016–ல் 06.09.2016–ம் தேதியன்று இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மீறி எதிர்மனுதாரர் தாவா சொத்தில் எதிர்மனுதாரர் கட்டிடம் கட்டினார் என்பதை மனுதாரர் தரப்பில் தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கத்தவறியதால் அதன்பொருட்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், மனுவின் தன்மையை கருதி இம்மனுவில் இருதரப்பினரும் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே இந்த மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

12. முடிவில், இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2021–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>
<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| ம.சா.1 | திரு கோபாலகிருஷ்ணன் ( மனுதாரர்) |
| ம.சா.2 | திரு மணி |
| ம.சா.3 | திரு கலியபெருமாள் |

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 23.02.2017 | மனுதாரர் பூம்புகார் காவல்நிலைய காவல்துறை ஆய்வாளருக்கு அனுப்பிய புகார் மனுவின் நகல் |
| ம.சா.ஆ.2 | 23.02.2017 | மேற்படி மனுவினை பெற்றுக்கொண்டதற்கு காவல்துறையினர் கொடுத்த மனு ரசீதின் அசல் |
| ம.சா.ஆ.3 | – | எதிர்மனுதாரர் பெயரிடப்பட்டுள்ள புதுமனை புகுவிழா அழைப்பிதழின் அசல் |
| ம.சா.ஆ.4 | – | குறுந்தகடுடன் கூடிய புகைப்படங்கள் நான்கு |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>

எ.ம.சா.1 திரு கணேசன் ( எதிர்மனுதாரர் )

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | நாராயணசாமி மற்றும் எதிர்மனுதாரர் பெயருக்கான வீட்டுவரி ரசீதுகள் நான்கின் அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 29.09.2018 | எதிர்மனுதாரர் பெயருக்கான 2015–16 மற்றும் 2016–17–ம் ஆண்டுக்கான குடிநீர் கட்டண ரசீதின் அசல் |
| எ.ம.சா.ஆ.3 | – | எதிர்மனுதாரர் மற்றும் நாராயணசாமி பெயருக்கான மின்கட்டண ரசீதுகள் 10–ன் அசல் |
| எ.ம.சா.ஆ.4 | 29.11.2020 | எதிர்மனுதாரர் மனைவி சந்திரா பெயருக்கான சீர்காழி வட்டாட்சியர் வழங்கிய இருப்பிடச் சான்றின் அசல் |
| எ.ம.சா.ஆ.5 | – | எதிர்மனுதாரரின் குடும்ப அட்டையின் அசலுடன் ஒப்புமை செய்யப்பட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.6 | 15.08.2013 | நாராயணசாமி என்பவரின் இறப்புச்சான்றின் நகல் |
| எ.ம.சா.ஆ.7 | 20.12.2013 | நாராயணசாமி என்பவரின் வாரிசு சான்றின் நகல் |
| எ.ம.சா.ஆ.8 | – | எதிர்மனுதாரர் பெயருக்கான ஆதார் அட்டையின் நகல் |
| எ.ம.சா.ஆ.9 | – | நாராயணசாமி என்பவரின் குடும்ப அட்டையின் நகல் |
| எ.ம.சா.ஆ.10 | 11.06.2006 | எதிர்மனுதாரர் மற்றும் நாராயணசாமி செய்துகொண்ட கடை வாடகைப் பத்திரத்தின் அசல் |

மா.உ.நீ.